# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 25/நகராட்சி/2018**

**நாள் : 03/09/2018**

**திரு V.M. பாலசுப்பரமணியன்,**
**தருமபுரி – 636 703.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தருமபுரி நகராட்சி,**
**தருமபுரி.** – **எதிர் மனுதாரர்**

தருமபுரி மாவட்டம், தருமபுரி நகராட்சி, பிடமனேரி, மோகன் மேஸ்திரி காலனி–2, 2/571 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு V.M. பாலசுப்பரமணியன் அவர்களின் 06.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 25/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து தருமபுரி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின்போது மனுதாரர் மற்றும் ஆணையர் அளித்த வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தருமபுரி மாவட்டம் மற்றும் நகராட்சி, பிடமனேரி, மோகன் மேஸ்திரி காலனி–2, 2/571 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு V.M. பாலசுப்பரமணியன் என்பவர், வெள்ளேகவுண்டன் பாளையம், வார்டு– C பிளாக் எண்.37, நகரபுல எண்–1, பழைய புல எண்.68/1A1 உள்ள அரசு மருத்துவ மனைக்குச் சொந்தமான இடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது வழிப்பாதையினை ஆக்கிரமித்து திருவாளர்கள் C. சின்னதம்பி, R. ஜெகதீசன் மற்றும் சிலர் ஒன்று சேர்ந்து சட்ட விரோதமாக கோயில் ஒன்றைக் கட்டியுள்ளனர் என்றும், அக்கோயிலினை அகற்ற தருமபுரி நகராட்சி ஆணையர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைக் குறித்து தருமபுரி நகராட்சி ஆணையர் தனது 08.03.2018 மற்றும் 11.04.2018 நாளிட்ட கடிதங்களில் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். 1920–ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகள் 182 மற்றும் 342–இன் படி, நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சாலை அல்லது நிலத்தில் ஆக்கிரமிப்புகள் இருக்கும் பட்சத்தில் சட்ட ரீதியாக ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்று தெரிவித்துள்ளதுடன் அரசு மருத்துவ மனைக்குச் சொந்தமான இடத்தில் இந்நேர்வு சம்பந்தப்பட்ட கோவில் கட்டப்பட்டுள்ளதால், ஆக்கிரமிப்பினை அகற்ற சட்டப்படியான நடவடிக்கையினை நகராட்சியால் மேற்கொள்ள இயலவில்லை என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மருத்துவமனைக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள சாலை சர்வே ஆவணங்களில் உட்பிரிவு செய்து நகராட்சிக்கு முறையாக ஒப்படைக்கப்படவில்லை என்றும், அரசு மருத்துவ மனைக்குப் பாத்தியப்பட்டதாகக் கருதப்படும் இடத்தில் கட்டப்பட்ட / கட்டப்படும் கட்டடங்களை அகற்றுவது போன்ற நடவடிக்கைகளை மருத்துவமனை நிர்வாகம்தான் மேற்கொள்ளவேண்டுமே தவிர நகராட்சிக்கு அதில் உரிமை இல்லை என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 29.05.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. பொது வழிப்பாதையினை ஆக்கிரமித்து 629 சதுர அடி பரப்பிலும் தனது நிலத்தில் 42 சதுர அடி சேர்த்தும் அக்கோவில் கட்டப்பட்டுள்ளதை முறையீட்டு மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், இக்கோயில் கட்டுவதற்கு முறையாக அனுமதி அளிக்க இயலாது என நகராட்சி நிர்வாகம் தெரிவித்ததையும் மனுதாரர் விசாரணையின்போது குறிப்பிட்டார். தனது தாயாரால் தருமபுரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு எண்.13/2012 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதையும் மனுதாரர் தெரிவித்தார்.

4. நகராட்சி நகரமைப்பு அலுவலர் மற்றும் ஆணையர் ஆகியோரிடம் முறையே 29.05.2018 மற்றும் 17.07.2018 ஆகிய நாட்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. சுகாதார துறைக்குச் சொந்தமான இடத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சாலை அமைத்திட ரூபாய் 4.95 லட்சம் ஒதுக்கியதைக் குறிப்பிட்டு 19.02.2009 நாளிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ஆணை எண்.1543/08/ஆர் 2–ஐ விசாரணையின்போது நகரமைப்பு அலுவலர் சமர்ப்பித்தார். முறையீட்டு மனுதாரர் கோவிலுக்கு அருகிலேயே வீடுகட்டி குடியிருந்து வருவதாகவும் மருத்துவ மனைக்குச் சொந்தமான இடத்திலேயே கோவில் கட்டப்பட்டுள்ளதாகவும், சாலை எதுவும் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்படவில்லையென்று ஆணையரும் விசாரணையின்போது குறிப்பிட்டுள்ளார்.

5. தருமபுரி நகராட்சி, வெள்ளே கவுண்டன் பாளையம், வார்டு–சி, பிளாக் எண்.37, நகர புல எண்.01–இல் உள்ள இடம் தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு சொந்தமான நிலம் என்றும், அவ்விடத்தில் கோவில் கட்ட நகராட்சி அனுமதி வழங்க இயலாது என மாவட்ட ஆட்சித்தலைவரின் மக்கள் குறை தீர்க்கும் மனுவிற்கு உரிய பதிலினை அளித்துள்ளார். மேலும், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவுகளின் கீழ் நகராட்சிக்குப்ப பாத்தியப்பட்ட சாலை அல்லது நிலத்தில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை மட்டுமே நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்பதாலும், கோவில் கட்டப்பட்ட இடம் அரசு மருத்துவமனைக்கு பாத்தியப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட துறையாலேயே ஆக்கிரமிப்பு கோயிலை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள இயலும் எனக் கருதுவதால், முறையீட்டு மனுதாரர் சம்பந்தப்பட்ட துறைக்கு முறையீடு செய்து கொள்ளலாம் எனத் தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018– ஆம் ஆண்டு, செப்டம்பர்** திங்கள், **3–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு V.M. பாலசுப்ரமணியன்,
**2/571, மோகன் மேஸ்திரி காலனி –2,**
**பிடமனேரி,**
**தருமபுரி – 636 703.**

2. **நகராட்சி ஆணையர்,**
**தருமபுரி நகராட்சி,**
**தருமபுரி.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**